JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-7 - Witness
for Prosecution

CC No. 71/2024 Crime No. 211/2023 Station Bhavani

| | | |
|---|---|---|
| Name | PW. 7 திருமதி மகேஸ்வரி | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 18.05.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சத்தியமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது கடந்த 14.06.2018ம் தேதியன்று இரவு 21.00 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்த பொழுது, பவானி, தேவராஜ் பிள்ளை சந்து என்ற விலாசத்தில் வசிக்கும் சிகாமணி என்பவரது மகன் ரஜினி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று நிறைய குற்ற எண் 211/2023 சட்டப்பிரிவுகள் 420 IPC & 5 r/w 7(3) OF TNLR ACTன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் மனு அ.சா.ஆ.8 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் மாண்புமி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தோம். ஒரு நகலை புலன் விசாரணைக்காக நிலைய ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

கடந்த 14.06.2023 ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு நான் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின்படி போலீஸ் பார்ட்டியுடன் எனக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் பெயரில் பவானி காவல் நிலைய குற்ற எண்.211/2023 சட்டப்பிரிவுகள் 420 IPC & 5 r/w 7(3) OF TNLR ACT வழக்கில் எதிரிகளை பிடிப்பதற்காக கண்காணித்துக் கொண்டிருந்தபோது, காடையாம்பட்டி பிரிவு, எச்பி பெட்ரோல் பங்க் அருகில் கண்காணித்த போது, அங்கு நின்று, பின்னர் விபரம் கேட்டுத் தெரிந்து கொண்ட எதிரிகள் நாகராஜன் மற்றும் ஆதிநாராயணன் ஆகியவர்களை விசாரித்த பொழுது, அவர்கள் தனது பெயரையும், முகவரியையும் கூறியவர்கள் பின் கூட்டு சதி செய்து, ஆன்லைனில் போனில் லாட்டரி எண்களை விற்று பொதுமக்களை ஏமாற்றி குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அவர்களை

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.05.18 06:17:23 +0530

கைதுக்கான காரணம் கூறி, அன்றைய தினம் 12.00 மணிக்கு கைது செய்தும், எதிரி ஆதிநாராயணன் அவர் தானாக முன்வந்து எந்த ஒரு தூண்டுதலும், அச்சுறுத்தலும் இல்லாமல் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் தண்டபாணி ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி சாட்சிகள் இருவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி ஆதிநாராயணன் என்பவர் மேற்படி சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் தண்டபாணி ஆகியோர்கள் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்த REDMI SKY BLUE கலர் சிம்கார்டு கொண்ட ஆண்ட்ராய்டு செல்போன் ஒன்றினையும், சாம்சங் சில்வர் கலர் ஆண்ட்ராய்டு டேப் ஒன்றினையும் மற்றும் எதிரி நாகராஜ் எடுத்து ஆஜர் செய்த சிம் கார்டுடன் கூடிய redmi note 8 pro செல்போன் ஒன்றினையும் மற்றும் சிம் கார்டுடன் கூடிய SAMSUNG GALAXY M 10 செல்போன் ஒன்றினையும், கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன்.

தற்போது நீதிமன்றத்தில் உள்ள செல்போன்கள் மற்றும் டேப் தான் நான் அன்றைய தினம் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். மேற்படி சாட்சிகள் இருவரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றேன். **REDMI SKY BLUE கலர் செல்போன் அ.சா.பொ.1 ஆகவும், SAMSUNG TAB அ.சா.பொ.2 ஆகவும், RED MI NOTE 8 PRO என்ற பச்சை கலர் செல்போன் அ.சா.பொ.3 ஆகவும் மற்றும் GALAXY M10 என்ற கருப்பு கலர் செல்போன் அ.சா.பொ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் சென்று கைது செய்த எதிரிகள் மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களை நிலைய ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் ஒப்புவித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரிகள் யாரும் என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த ஆவணங்களும் கைப்பற்றவில்லை என்றாலும், சரியல்ல. 3 ம் எதிரி முதல் 13ம் எதிரிகள் மீது புகார் எதுவும் தனிப்பட்ட நபர்கள் கொடுக்கவில்லை என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.18 06:17:33 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani